III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.125/2017 and 355/2019

Deposition of witness for the Defendant/DW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 19-11-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : மாதேஸ்குமார் | Village | : |
| Father's / Husband's Name | : குப்புசாமி | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு அசல் வழக்கு எண்.125/2017 வழக்கின் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற என்னுடைய கிரைய ஆவணமான வா.த.சா.ஆ.10 முதல் 12 வரையிலான ஆவணங்களில் லேஅவுட் ஏற்பட்டதற்கான எந்த விவரங்களும் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. அவ்வாறு லேஅவுட் ஏற்பட்டிருந்தால் அது அனுமதிக்கப்பட்ட லேஅவுட்டா அல்லது அனுமதி பெறப்படாத லேஅவுட்டா என்ற விவரங்கள் எதுவும் என்னுடைய வழக்கிலும் இல்லை என்னுடைய ஆவணங்களில் இல்லை என்று சொன்னால் அது பற்றி நான் சரியாக பார்க்கவில்லை. வாதியின் தந்தை வழி பாட்டனார் பார்த்தசாரதி நாயக்கரிடமிருந்து வழக்கு சொத்தை நான் கிரையம் பெறவில்லை அதேபோல் பார்த்தசாரதி நாயக்கரின் அண்ணன் மாதவன்நாயக்கரிடமிருந்து வழக்கு சொத்தை நான் கிரையம் பெறவில்லை. என்னுடைய கிரைய ஆவணமான வா.த.சா.ஆ.10 முதல் 12 வரையிலான ஆவணங்களில் எனக்கு சொத்தை கிரையம் கொடுத்ததாக 4 மற்றும் 5 பிரதிவாதிகள் பெயர் தான் இருக்கின்றது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.ஆ.13 எனது சொத்து சம்மந்தமான TSLR பதிவு என்றால் சரிதான். இந்த ஆவணத்தின் 17 வது காலத்தில் எனது சொத்தை விற்றதாக சொல்லுகின்ற சரோஜா மற்றும் குபேந்திரம் ஆகியோர்களது பெயர்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.13 ஆவணத்தில் வாதியின் பாட்டனாரின் அண்ணன்பெயரான மாதவநாயக்கர் பெயர் தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். நாங்கள் கிரையம் பெற்ற ஆவணமான வா.த.சா.ஆ.10 முதல் 12 வரையிலான

ஆவணங்களில் சர்வே எண்.515/3 பி மற்றும் 516/1 பி 1 சி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.13 TSLR ல் காலம் 4 ல் சர்வே எண்.515/3 பி மற்றும் 515/4 பி என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். சாட்சி தற்பொழுது தான் தாசில்தாருக்கு நில அளவை செய்ய மனு செய்து நில அளவை செய்து இந்த சர்வே எண்ணை சப்டிவிசன் செய்து TSLR கொடுத்தார்கள். வா.த.சா.ஆ.13 ஆவணத்தில் முன் உரிமையாளரின் பெயர் தவறுதலாக இருக்கின்றது என்பதை நிவர்த்தி செய்ய தாசில்தாரிடம் மனு கொடுத்தேனா என்றால் அப்படி மனு எதுவும் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ.10 முதல் 12 வரையிலான ஆவணங்களோடு சேர்த்து தாக்கல் செய்திருக்கின்ற வரைபடத்தில் அதன் மேற்கு பகுதியில் canal road என்று உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்குபுற canal road யை ஒட்டி அமைந்துள்ள இந்த வரைபடத்தில் A என்று குறியீடு செய்துள்ள சொத்தை தான் நான் வாங்கியதாக வா.த.சா.ஆ.10 முதல் 12 வரையிலான ஆவணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். இந்த வரைபடத்தில் கிழக்குபுறமாக B என்று காட்டப்பட்டிருக்கின்ற சொத்தை தான் 2 ஆம் பிரதிவாதியான எனது தம்பி கிரையம் பெற்றிருக்கின்றார் என்றால் சரிதான். என்னுடைய அப்பா தான் என்னுடைய தம்பி மற்றும் தங்கைக்கு இந்த சொத்துக்களை வாங்கிக்கொடுத்தார். என்னுடைய தங்கை வாங்கிய சொத்து இந்த வரைபடத்தில் C என்று காட்டப்பட்டுள்ளது அது B சொத்திற்கு கிழக்குபுறமாக அமைந்திருக்கின்றது என்று சொன்னால் சரிதான். நான் வாங்கியதாக சொல்லும் A சொத்தின் மேற்குபுறத்தில் canal road யை ஒட்டி 48 அடிகள் நீளம் கொண்டுடதாக கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வரைபடத்தில் நான் வாங்கிய சொத்து மட்டும் தான் canal road யை ஒட்டி அமைந்திருப்பதாக காட்டப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். என்னுடைய தம்பி மற்றும் தங்கை வாங்கிய B, C, D சொத்துக்கள் canal road யை ஒட்டி அமைந்திருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்கிய வா.த.சா.ஆ.10 முதல் 12 வரையிலான ஆவணங்களில் மேற்குபுறமாக உள்ள canal road பக்கம் 48 அடிகள் மட்டுமே கிரையம் செய்து கொடுத்ததாக உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாசில்தாரிடம் வாங்கியதாக சொல்லப்படும் வா.த.சா.ஆ.13 TSLR ல் மேற்குபுறம் கேனால்ரோடு பக்கம் 106 அடி நீளம் உள்ளதாக காட்டப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் இது பற்றி எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.13 TSLR ல் RPT.No.9314/2014

என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ.60 ஆவணத்தில் 31.12.2014 ல் கடைசியாக வழங்கப்பட்ட RPT.No.9288 என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். வா.த.சா.2 தன்னுடைய சாட்சியத்தில் 31.12.2014 வரை 9288 என்ற எண் வரை தான் TSLR வழங்கப்பட்டிருக்கின்றது என்று சாட்சியம் அளித்திருக்ககூடிய நிலையில் எனது சொத்துக்குரிய TSLRNo.9314 என்ற எண் வழங்கப்படவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

(அறிவார்ந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).